**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 40 /2024 பி.வா.சா.4**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: விஜயா தந்தை பெயர்: வீரசேகர்

---

**<u>17.03.2026:</u>**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான் . நான் தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் . எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் நான் தான் சொன்னேன். நான் என் மகளுக்கு நகல் எழுதிக்கொடுத்தேன் . தாவாச் சொத்தின் சர்வே எண் 90/11 பி ஆகும். அதில் 48 செண்டு விஸ்தீரணம் ஆகும் . தாவாச் சொத்தானது முத்துவின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது . எனது தகப்பனார் பெயர் செல்லக்கண்ணு ஆகும் . செல்லகண்ணு, முத்து, பச்சமுத்து , வெள்ளைச்சாமி ஆகியோர் உடன் பிறந்தவர்கள்.

2. சர்வே எண் 84/1பி ன் கூட்டு பட்டா பி .வா.சா.ஆ–14 எதற்காக தாக்கல் செய்தேன் என்று எனக்கு தெரியாது . கூட்டுக்குடும்ப சொத்துக்களை பாகப்பிரிவினை செய்ததை காண்பிக்க தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவிற்கு பாகப்பிரிவினையில் தாவாச் சொத்து கிடைத்தது. பாகப்பிரிவினைப் பத்திரம் பதிந்து கொள்ளவில்லை. எனது அப்பா பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை . சம்மதத்தின் அடிப்படையில் பட்டா மாற்றி கொண்டோம். நான் எனது அப்பாவிற்கு ஒரே மகள் ஆவேன்.

3. எனக்கு எனது அப்பா தாவாச் சொத்தை எதற்காக தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது . தாவாச்சொத்தை நான் தான் உழுது விவசாயம் செய்து வருகிறேன். தாவாச் சொத்தை உள்ளூர் டிராக்டரை வைத்து உழுத போது 2ம் பிரதிவாதி தகராறு செய்ததால் பிரச்சனை ஏற்பட்டு இரு தரப்பினர் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4. திருப்பத்துார் நீதிமன்றத்தில் நான் ஆஜராகாத காரணத்தினால் தாவா வழக்கில் வாதிகளுக்கு சாதகமாக ஒரு தலைபட்ச தீர்ப்பு பிறப்பப்பட்டது என்றால் சரிதான். அதன்

அடிப்படையில் வாதிகள் மற்றும் 2,3 பிரதிவாதிகள் பெயரில் தாவாச் சொத்திற்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான் . அதன் பெயரில் நான் எனது மகள் சத்யாவிற்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து தாவாச் சொத்திற்கு பட்டா மாறுதல் செய்தேன் என்றால் சரிதான் . தாவாச் சொத்து எங்கள் அப்பாவிற்கோ பாத்தியமானது இல்லை என்றால் சரியல்ல.

5. திருமணம் முடிந்த உடன் எனது அப்பா தனியாக சென்று விட்டார் என்றால்சரியல்ல. எனக்கு 16 வயது வரை கூட்டுக்குடும்பமாக தான் இருந்தோம். என் அப்பா ஒடுவன் பட்டி கிராமத்தில் தான் குடியிருந்தார் . நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லிகிறேன் என்றாலும் எனது அப்பா தனியாக சென்று வசித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை அபகரிக்கப்பதற்காக வருவாய் துறை மூலம் ஆவணங்கள் ஏற்படுத்தி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எனக்கு எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல.

6. என்னுடைய தகப்பானாருக்கு நான் ஒரே வாரிசாக உள்ள நிலையில் ஒரு ஆவணத்தை ஏற்படுத்தி வைக்க வேண்டி இந்த தானசெட்டில்மெண்ட் எனது தகப்பனார் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல . இடைகாலத்தில் எனது பெயரில் ஏற்பட்ட பட்டாவின் அடிப்படையில் சாகுபடி அடங்கல்களை தயாரித்தேன் என்றால் சரியல்ல. வழக்கை மேல் நடத்தாமல் எனது மகள் சத்யாவிற்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல . சத்யா மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் அடங்கல் பெற்றுள்ளார் என்றாலும் தாவாச்சொத்தில் அவருக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல . வாதிகளுக்கும், 2,3 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக வழக்காடிகிறேன் என்றால் சரியல்ல.